மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு

# சூழ்நிலையின் துரித மதிப்பிடல்

(**Rapid Context Assessment** )

பெப்ரவரி 2009

CONSORTIUM OF CHA HUMANITARIAN AGENCIES (GTE) LIMITED

ISO 9001 REGISTERED

## தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு


| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | 2 |
| ஆட்சிமுறைமை | 2 |
| பாதுகாப்பு | 3 |
| மனித உரிமைகள் | 3 |
| பொருளாதார சூழ்நிலை | 4 |
| சுற்று ச்சூழல் | 5 |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | 5 |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | 6 |
| வெளிச் செயற்பாட்டாளர்கள் | 7 |

### மாவட்ட

| | |
|---|---|
| அம்பாறை | 7 |
| மட்டக்களப்பு | 7 |
| கொழும்பு | 8 |
| யாழ்ப்பாணம் | 8 |
| மன்னார் | 9 |
| திருகோணமலை | 9 |
| வவுனியா | 9 |


## தற்காலப் போக்குகளின் பகுப்பாய்வுச் சட்டகம்

| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | → |
| ஆட்சிமுறைமை | ↘ |
| பாதுகாப்பு | ↘ |
| மனித உரிமைகள் | ↘ |
| பொருளாதார சூழ்நிலை | → |
| சுற்று ச்சூழல் | → |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | → |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | → |
| வெளிச் செயற்பாட்டாளர்கள் | ↘ |

**சுட்டிகளின் அடையாளம்**

# முக்கிய சாராம்சம்



பெப்ரவரி மாதத்தில் நாட்டின் அரசியல் நிலைமைகளில் முக்கியமான மாற்றங்கள் ஏதுமிருக்கவில்லை. நாட்டின் அரசியல் நிலைமைகளில் அரசாங்கம் அநேகம் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தது. தேர்தல் களத்திலான அதன் ஆதிக்கம் சவாலுக்குட்படுத்தப்பட முடியாததாக இருந்தது. அரசாங்கக் கட்சி பாராளுமன்றத்தில் ஏனைய அரசியல் கட்சிகளின் ஆதரவில்லாமல் அரசியலமைப்பைத் திருத்துவதற்கான அதிகாரத்தை அளிக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் இலக்கு வைத்துள்ளதுபோல் தெரிகிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, கட்சித் தலைமைத்துவ விடயத்தில் பிளவுபட்டுப் போயுள்ளது. கட்சியில் சிலர் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாற்றம் செய்யப்பட வேண்டுமெனக் கோருகின்றனர், ஆயினும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அது கட்சியை மேலும் பலவீனப்படுத்திவிடுமென அச்சப்படுகின்றனர். போர் முனையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவது உறுதியாகியுள்ளது. ஆயினும் மோதல்களுக்குப் பின்னரான பெரிதளவிலான உதவிகளுக்கு நாடு தகுதியானது என்பதனை நன்கொடை நாடுகள் நம்புவதற்கு பயனுள்ளதொரு அரசியல் தீர்வு தேவை.

மாகாண சபைத் தேர்தல்களும் நாட்டில் அதிகாரப்பகிர்வு மற்றும் ஆட்சி முறைமையின் பலவீனத்தை எடுத்துக்காட்டுபவையாக உள்ளன. தேர்தல் பிரச்சாரங்கள் மாகாணங்கள் பற்றிய விடயங்களாக அல்லாமல் யுத்தம் பற்றியதாக உள்ளன. கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர், அவருக்குக் கிடைக்கும் வளங்களின் பற்றாக்குறையால் ஆட்சி செய்வதற்கான தனது செயல் திறனின் அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக முறையிடுகிறார். கொலைகள், காணாமற் போதல்கள், ஆட்கடத்தல்கள் மற்றும் கைதுகள் போன்ற மனித உரிமை மீறல்கள் தொடர்கின்ற போதிலும் முன்னைய பல மாதங்களில் இருந்ததைவிட குறைவான எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. ஆட்சி முறைமையில் முன்னேற்றமின்றி நீடித்த சமாதானம் சாத்தியமானதல்ல. இந்த விடயங்களில் சிவில் சமூகத்தின் செயற்பாடுகள் இந்த மாதத்தில் குறைவாகவே காணப்பட்டது. இந்த விடயங்களைப் பயனுறுதியான வகையில் கையாள்வதற்கு எதிர்க்கட்சி அரசியலும் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது. எவ்வாறாயினும், மனித உரிமைகள் தொடர்பாக அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பவற்றின் செயற்பாடுகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டங்களில் கடும் விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டன. உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் பிரதிநிதியொருவர் நாட்டிற்கு விஜயம் செய்தார்.

பெப்ரெவரி மாதத்தில் சண்டைகளின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் முக்கியமான இராணுவ மற்றும் கடற்தள வசதிகளை இழந்திருந்தது. அதன் ஆட்புல எல்லைகள், ஆயுத வழங்கல்கள் மற்றும் ஆளணி வளங்கல் சுருங்கி வரும் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்பு மீதான தற்கொலை வான்தாக்குதல்கள், இராணுவத்தினர் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் மீதான சோதனைச் சாவடிகளில் நிகழ்ந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் போன்ற செயல்களை நடாத்தின. அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளும் பெருமளவிலான பொதுமக்களின் உயிரிழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதாக அரசாங்கம் கோரினாலும், அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

கடந்த மாதத்தில் பொருளாதாரம் கலவையான பெறுபேறுகளை ஏற்படுத்தியது. தேயிலை மற்றும் இறப்பர் விலைகள் சரிவடைந்ததுடன் உல்லாசப் பிரயாணிகளின் வருகையும் வீழ்ச்சியுற்றது. நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்கம் குறைவடைந்ததுடன், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தில் கடன் கேட்க வேண்டியதொரு நிலைக்கு அதிகம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. கோல்டன் கீ கடன் அட்டை நிறுவனத்தின் வீழ்ச்சியால் நிலைகுலைந்துள்ள நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் 4.5 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான ஒரு உதவித்தொகைத் திட்டமொன்றை பிரேரித்துள்ளது.

பெப்ரெவரி மாதத்தில் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையிலான நல்ல செய்தியாகப் பணவீக்கம் மேலும் குறைவடைந்தமை காணப்படுகிறது, இதற்குப் பங்களித்தவை பாவனைப் பொருட்களின் விலை வீழ்ச்சி மற்றும் இறுக்கமான நிதிக்கொள்கை என்பவையாகும். வங்கிக் கடன்களை மலிவானதாக்குவதற்கு வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. யுத்தம் முடிவுறுகின்ற நிலைமை வர்த்தக சமூகத்திற்கு நம்பிக்கையான எதிர்காலத்திற்கான பார்வையை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் இந்த மாதத்தின் பங்குச்சந்தை அதன் பெறுமதியின் 7% இனை இழந்தது.

சுற்றுச்சூழலில், இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ மையம் மற்றும் டயலொக் ரெலிகொம் (தனியார்) நிறுவனம் என்பன இணைந்து டயலொக் கையடக்கத் தொலைபேசி வலைப்பின்னலைப் பயன்படுத்தி ஒரு அனர்த்த மற்றும் அவசரகால எச்சரிக்கை வலயமைப்பை (DEWN) ஆரம்பித்தன. இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கங்களின் சம்மேளனம், நாட்டின் முக்கியமான ஐந்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாற்றம் இல்லை | → | சிறிது மேம்பட்டுள்ளது | ↗ | சிறிது சீர்கெட்டுள்ளது | ↘ |
| கணிசமானளவு மேம்பட்டுள்ளது | ↑ | கணிசமானளவு சீர்கெட்டுள்ளது | ↓ | | |

தொழிற்துறைகளில் சுற்றுச்சூழல் நடைமுறைகளை மேம்படுத்துவதற் கானதோர் நிகழ்ச்சியை முன்னெடுத்தது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக வடக்கில் ஏற்படுத்தப்பட்ட முகாம்கள், தண்ணீர், வடிகால் மற்றும் சுகாதாரம்

அதேபோன்று காடுகளைத் துப்பரவு செய்தல் போன்றவை உட்பட பல்வேறு சுற்றுச்சூழல் கரிசனைகளை ஏற்படுத்தியுள்ளது.

# தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு - 28/1/2009—28/2/2009

## அரசியல் சூழ்நிலை

மேல்மாகாண சபைக்கான தேர்தல்கள் முடிவடையும்வரை எஞ்சியுள்ள தெற்கு மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பிற்போட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு மாகாண சபையையும் இதுவரை கைப்பற்றவில்லையென்பதுடன் எந்தவொரு மாகாணத்திலும் ஆட்சியில் அமர்ந்திருக்கும் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு சவால் விடுமளவிற்குப் போதுமான ஆசனங்களைக் கொண்டிருக்கவில்லை. சில ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சமனிலையைக் கவிழ்ப்பதன் மூலம் வாக்குகளைக் கூடுதலாகக் கவரும் யாருமொருவரால் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாற்றம் செய்யப்படுவதற்கு கடுமையாக செயலாற்றுகின்ற போதிலும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் இது கட்சியை இரு வேறுபட்ட திசைகளில் செல்லுமளவிற்கு கட்சியைப் பாதிப்படையச் செய்வதுடன் இது மாகாணசபை தேர்தலில் தோற்பதை விட மோசமானதென எண்ணுமாற்போல் தெரிகிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்கி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அதன் அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் இணைந்து கொள்ளவிருப்பவர்கள் ஆகியோர் ஒரே பெயர் மற்றும் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடும் ஒரு தனிக்கட்சியை உருவாக்குவதில் இணைந்துள்ளனர். எவ்வாறாயினும், அதிக எண்ணிக்கையிலான விருப்பு வாக்குகளை உறுதிப்படுத்துவதற்கு ஒரு மாவட்டத்தில் வேட்பாளர்கள் மத்தியில் அதிக உட்பூசல்களை ஏற்படுத்துமென்பதினால் பாராளுமன்ற ஆசனமொன்றை உறுதிப்படுத்துவதற்காக விருப்பு வாக்குகளுக்குப் போட்டியிடுபவர்களுக்கு இது சிரமத்தை ஏற்படுத்துவதாக அமையும். வேறுபட்ட அரசியல் கட்சிகளுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒரே கட்சி மற்றும் சின்னத்தின் கீழ் போட்டியிடுவதால் இந்த நிலைமை ஏற்படுகிறது.

அரசியலமைப்பைத் திருத்துவதற்குத் தேவையான அதிக பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் கொண்டிருக்கலாமென்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆசனங்களை அதிகமாக வெல்வதற்குத் திட்டமிடுகிறது. அவர்களுக்கு 225 மொத்த ஆசனத்தில் குறைந்தது 150 ஆசனங்களாவது (2/3 பங்கு) தேவை. இது அரசியலமைப்பின் ஒரு தேவைப்பாடாகும்.

வடக்கு மற்றும் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அரசியல் விளையாட்டுக்கள் நடைபெறுகின்ற வேளையில், பாதுகாப்புப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதிக் கோட்டையையும் அநேகம் பிடித்துவிடும் நிலையிலுள்ளனர். இந்த நிலைமை ஆளும் அரசியல் கட்சியின் பிரபல்யத்தை உயர்த்துவதற்கு நிச்சயமாக உதவியுள்ளது. தற்போதைய தேர்தல்கள் பிரபல்யத்தின் அடிப்படையிலான வாக்குகளின் மீதே போட்டியிடுகின்றன என்பதுடன் அவை எப்போதுமே சரிந்து விழுந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தை கையாள்வதற்கான திறன் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதன் அர்த்தத்திலல்ல.

நிரந்தரமான அமைதி இருக்குமாயின் வடக்கு, கிழக்கில் பல பில்லியன் டொலர்கள் உதவிகளுக்கு உறுதியளித்துள்ள சமாதானச் செயன்முறைகளின் இணைத்தலைமை நாடுகள் (நோர்வே, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம்) நிலையான அரசியல் தீர்வொன்று எட்டப்படுவதைக் காண இன்னமும் ஆவலாக உள்ளன.

## ஆட்சிமுறைமை

*மத்தியிலுள்ள அரசியல் நிகழ்ச்சித்திட்டம் அதிகாரப் பகிர்வை இல்லாதாக்கிறது*

அரசாங்கம் அதன் இஷ்டத்திற்கேற்றபடி மாகாணசபைகளை முன்னதாகவே கலைப்பதும் ஆளும் கூட்டமைப்பின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப மாகாண சபைத் தேர்தல்களை கால அட்டவணைப்படுத்துவதும் நல்ல ஆட்சி முறையின் அனைத்துக் கோட்பாடுகளையும் மாசுபடுத்துகிறது. மாகாணசபை முறை, அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்டு இன முரண்பாடுகளுக்கு ஒரு தீர்வைத் தரும் என்பதன் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டது. இது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட மாகாணசபை முறைமையை முழுமையாக அமுல் படுத்துவதாக உறுதியளித்த தற்போதைய அரசாங்கத்தால் மீள் வலியுறுத்தப்பட்டது. ஆயினும் அதன் சொல்லுக்கும் செயலுக்குமிடையில் பாரியதொரு இடைவெளி உள்ளது.

பெப்ரெவரி 14 ஆம் திகதி நடைபெற்ற மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைக்கான தேர்தல்களில் முக்கியமான பிரச்சாரம் யுத்தம் பற்றியதாகவே இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமர்களில் அரசாங்கத்தின் இராணுவ வெற்றிகளே ஆளும் கட்சியின் தேர்தல் பிரச்சாரங்களின் முக்கிய விடயமாக இருந்தது. மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கமான அதிகாரப் பகிர்வு மற்றும் உள்ளூர் விடயங்கள் போன்றவற்றின் மீது இல்லாமல் வடக்கின் யுத்தப் பிரச்சினை போன்ற தேசிய மட்டத்திலான பிரச்சினைகளே தேர்தலில் முக்கிய பிரச்சினைகளாக பிரச்சாரம் செய்யப்பட்டமை வருந்தத்தக்கது. இதே விடயங்களே அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களிலும் கூட எதிரொலித்தது. இந்த விடயத்தின் மீதே முதன்மையான கவனம் செலுத்தப்பட்டதினால் எதிர்க்கட்சி வேட்பாளர்களும் கூட இந்த விடயம் குறித்தே பதிலிறுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அண்மைய மாகாணசபைத் தேர்தல்களில் யுத்தம் மீதான கவனம், தற்போதைய வேளையில் வடக்கின் மனிதநேய நெருக்கடிகளுடன் இணைந்ததாக இருந்தமையானது, ஓர் நெருடலான அம்சமாக இருந்தது. உள்ளூர் ஆட்சி முறைமையின் பண்பாட்டில் மனித உரிமைகள் பற்றிய கவனமின்மை இருந்தது அல்லது அதில் பெரும் குறைபாடிருந்தது. பொருளாதார வளங்களின்மை மற்றும் தீர்மானமெடுக்கும் அதிகாரமின்மை என்பவற்றால் உள்ளூர் ஆட்சி முறைமையில் ஈடுபடுவதற்கான தனது சக்தி முடக்கப்பட்டுள்ளதாக தெரிவு செய்யப்பட்ட கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பல சந்தர்ப்பங்களின்போது முறையிட்டுள்ளார். உள்ளூர் ஆட்சி முறைமையின் பலவீனம் மற்றும் யுத்தம் காரணமாக நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கெதிராக உள்ளூர் சமூகங்களிலிருந்து பகிரங்கமாக குரல்கள் எழுப்பப்படுவது அரிதாக இருப்பதே இங்கு பிரச்சினையாகும். தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் 5 சதவீதத்திற்கும் குறைவான தொகையே மாகாணசபைகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

யுத்தம் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமை மீறல்களுடன் தொடர்பு பட்டிருப்பதினால் அது அரசாங்கத்திற்கெதிராக கடும் சினத்தை ஏற்படுத்துவதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளையும் மற்றும் பிரிவினைவாதக் கருத்தியல்புகளையும் யுத்தத்தினால் இல்லாதொழிப்பதென்பது சாத்தியமற்றது. தோல்வி காணும் நிலையிலும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆற்றல் பிடிவாதத் தன்மையுடன் கூடிய மோசமானதொன்றென்பதை கொழும்பு மீது எதிர்பார்க்காதவொரு வான் தாக்குதலை நடாத்தியதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இதேசமயத்தில், தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் கிழக்கில் சிங்களக் கிராமமொன்றைத் தாக்கி, சிறுவர்களுட்பட 20 பேர்களைக் கொன்றனர். இராணுவத்தை மையப்படுத்திய தற்போதைய மனோநிலை சமாதானத்தை இப்பொழுதோ அல்லது எதிர்காலத்திலோ கொண்டு வருமென எதிர்பார்க்க முடியாது. அரசாங்கம் மற்றும் சமூகங்கள் பயங்கரவாதத்திற்கான அரசியல் மூல காரணங்களைக் கண்டறிய வேண்டியதுடன் நல்லாட்சி, உள்ளூர் சுயாட்சி மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகள் மீது ஐயப்பாடுகளின்றி கவனம் கொள்ளுதல் வேண்டும்.

## பாதுகாப்பு நிலை

காலக்கெடு கடந்துவிட்ட போதிலும் பெரும் எண்ணிக்கையிலான அப்பாவிப் பொது மக்கள் இருதரப்புக்குமிடையில் அகப்பட்டுக் கொண்டுள்ளமை கண்கூடாக தெரிந்திருந்தும் கூட இக்காலப்பகுதியில் சண்டைகள் மேலும் தொடர்ந்தன. டிசம்பர் 2008 நடுப்பகுதியிலிருந்து பெப்ரெவரி 2009 வரை 2000 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும், 4500 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தும், 35000 இற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.
இந்த இறுதிச்சமர், மூன்று தசாப்த காலமாக சிவில் யுத்தத்தில் அரசாங்கத் துருப்பினர் அதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினருக்கும் பலத்த உயிர்ச்சேதங்களை விளைவித்துள்ளது.
தமிழீழ விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த்தாக்குதல்கள் இருந்தபோதிலும் ஆட்புல எல்லை மற்றும் சொத்துக்கள் என்பன அரசாங்கப் படைகளினால் கைப்பற்றப்பட்டன. பெப்ரெவரி 25 ஆம் திகதியின் பின்னைய அறிக்கைகளின்படி தமிழீழ விடுதலைப் புலிகளை 58 சதுரகிலோ மீற்றர் பரப்பளவிற்குள் முடக்கியுள்ளதாகத் தெரிகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் வசமிருந்த பகுதிகள் மட்டும் சுருங்கவில்லை, அதேபோன்று பாதுகாப்பரண்களும் சுருங்கியுள்ளன. அம்பலவண்பொக்கணையின் வீழ்ச்சியை
அடுத்து இலங்கை இராணுவத்தின் 58 ஆம் படைப்பிரிவால் புதுக்குடியிருப்பின் மேற்குப் பகுதி அண்மையில் கைப்பற்றப்பட்டது. இது புதுக்குடியிருப்பு வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய இராணுவ இடமாகக் கருதப்படுகிறது. பாதுகாப்பு படைகள் கைப்பற்றியவற்றுள் "அருள்" குண்டுகள் உட்பட குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை, நீர் மூழ்கிக் கப்பல் போன்ற நீரடிப் படகுகளோடு, முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார்கட்டுக்குளம் பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மூன்று சிறிய நீரடிப் படகுகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானக் கட்டுமாணத் தளம் மற்றும் தலைவர்களுக்கு பிரத்தியேக பாதுகாப்பு அளித்த ராதா படையணித் தலைமையகம், தண்டனை முகாம் மற்றும் விசுவமடுவுக்கு மேற்கே ஐந்து பகுதிகளிற்கும் பரந்திருந்த திறந்தவெளிச் சிறைச்சாலை என்பவை அடங்குகின்றன. ஜனவரி மாதப் பிற்பகுதியில் படைகள் விசுவமடுச் சந்தியை அடைந்திருந்தன. அரசாங்கத் துருப்புகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பயிற்சியளிக்கும் முகாம் ஒன்றினையும் கைப்பற்றியிருந்தனர். புதுக்குடியிருப்புக்கு வடக்கே முன்னேறும் துருப்பினர், தன்னைத்தானே வெடிக்கச் செய்து எட்டு இராணுவத்தினரைக் காயப்படுத்திய தற்கொலைப் போராளி உட்பட நிலக்கண்ணிகள் புதைத்த ஆறு மண் அரண்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள், கடுமையாகக் காயமடைந்த மக்களை தற்கொலைக் குண்டுதாரிகளாகப் பயன்படுத்துவதாக உறுதிப்படுத்தப்படாத அறிக்கைகள் தெரிவிக்கின்றன. விசுவமடுவில் சுதந்திரபுரம் எனுமிடத்தில் இடம்பெயர்ந்த மக்களோடு வந்தவொரு 13 வயதுச் சிறுமி தன்னைத்தானே வெடிக்கச் செய்ததில் 20 இராணுவத்தினர் மற்றும் 10 பொதுமக்கள் உட்பட 30 பேர் கொல்லப்பட்டதுடன் 64 பொதுமக்கள் காயமடைந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. இது பாதுகாப்பு படையினர் வெளிக்காயங்களினால் இறக்கும் பொழுது மட்டுமே நியாயப்படுத்தப்படும். சுதந்திர தினக் கொண்டாட்டங்களை அடுத்து அரசாங்கப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடைசிக் கடற்தளம் "சாலை"யைக் கைப்பற்றினர். இது அவர்களைக் கடலிலிருந்து துண்டித்து நிலப் பகுதிகளில் முடக்கியுள்ளது. சாலை, கடற்கரையை அண்டியதான ஒரு தொகுதிக் காடு மற்றும் வாவியைக் கொண்டதாகவும், மக்கள் குடியிருப்பற்ற பகுதியாகவும் உள்ளதினால் தந்திரோபாய ரீதியில் முக்கியமானதொரு இடமாகும். இவ்விடத்திலிருந்தே, தமிழீழ விடுதலைப் புலிகள், இலங்கை கடற்படையினர் மீது பல மோசமான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

தற்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தினைக் கொண்ட பகுதி, ஐந்து வெவ்வேறு இடங்களிலிருந்து 53 ஆம் படைப்பிரிவு, 55 ஆம் படைப்பிரிவு, 55 ஆம் பிரிவு, 58 ஆம் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படை 2 மற்றும் 4 ஆகிய ஐந்து வெவ்வேறு பிரிவுகளால் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் சுருங்கியுள்ள வேளையில் இலங்கை இராணுவம் தங்கியுள்ள துருப்பினருக்கு மேலதிக பாதுகாப்பளிப்பதற்கு இரண்டாவது பாதுகாப்பு நிலையொன்றை நிர்மாணிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. மூன்று தசாப்பதங்களாக சிவில் யுத்தத்தை முடிவுறுத்தும் நாலாம் ஈழப்போரின் இறுதிச் சமரில் 53 ஆம் மற்றும் 58 ஆம் படைப்பிரிவுகள் ஈடுபடுமென நாம் எதிர்பார்க்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான ஏழு விமான ஓடுபாதைகளை அரசாங்கத் துருப்பினர் கைப்பற்றிய போதிலும் பாதுகாப்பு படைகளால் விமானங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தக் காலப்பகுதியில் புலிப் போராளிகள் அவர்களின் முதலாவது வான் வழியான தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டதில் 2 பேர்கள் கொல்லப்பட்டதுடன் 50 பேர்கள் காயமடைந்தனர். இந்த தற்கொலைத் தாக்குதல் அதி முக்கியமான நபர்கள் மற்றும் பொருளாதார மையங்களை இலக்காகக் கொண்டு இரண்டு விமானங்கள் மூலம் நடாத்தப்பட்டது. இவ்விமானங்கள் பாதுகாப்பு படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. மார்ச் 26, 2007 அன்று கட்டுநாயக்க மீதான முதலாவது வான்தாக்குதலுடன் இது தமிழீழ விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட ஒன்பதாவது வான்தாக்குதலாகும். அம்பாறை மாவட்டத்தில் இங்கினியாகலவிலுள்ள கரம்மிட்டியா கிராமத்தில் 21 பேர்கள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களென சந்தேகிக்கப்படும் ஒரு குழுவினரால் கொல்லப்பட்டனர்.

பெருமளவிலான பொதுமக்கள் கொல்லப்படுகின்ற போதிலும், இலங்கையிலிருந்து பயங்கரவாதத்தை ஒழிக்க இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. அக்கறை கொண்ட பல்வேறு தரப்பினர்களிடமிருந்தான அழுத்தங்களைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜனவரி 29 ஆம் திகதி 48 மணிநேர "பாதுகாப்பு பாதை" ஒன்றை அறிவித்தார். பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து சாதகமான பதிலை எதிர்பார்த்து இது மேலுமொரு 48 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்டதொரு அரசாங்கம், சர்வதேச சட்டத்தின் கீழ் காயம் மற்றும் உயிரிழப்புகளிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் தங்களது கட்டுப்பாட்டு பகுதிகளில் சண்டை நடக்கும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் வெளியேறிச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டிய கடப்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் உண்டு என்பதையும் வலியுறுத்தி "பாதுகாப்பு வலயங்களுக்கு" மதிப்பளித்தல் வேண்டுமென அக்கறை கொண்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபோதும் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புமே பாதுகாப்பு வலயத்தில் பொதுமக்கள் இலக்கு வைக்கப்படுவதற்கு ஒருவரையொருவர் குற்றம் சுமத்தினர். இராணுவ அறிக்கைகளின்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் 250,000 க்கும் அதிகமான பொதுமக்களை அந்தப் பகுதிகளிலிருந்து விலகிச் செல்வதற்கு தடை செய்வதுடன் அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கிறது. இதேவேளை அந்தப் பகுதிகளிலிருந்து எவரும் விலகிச் செல்வதை தாம் தடை செய்யவில்லையென தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது 700 தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளே உள்ளனர் என்றும் அதில் 250 பேர்கள் சரணடைந்துள்ளதுடன் மற்றும் சிலர் இயக்கத்தை விட்டு தப்பியோடி உள்ளதாகவும் இராணுவம் பெப்ரெவரி 12 ஆம் திகதி கூறியது. தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் எண்ணிக்கை குறைவடைகிறது, ஆனால் அரசாங்கப் படைகளுக்கல்ல. அது அரசாங்கத்தின் பிரச்சாரத்துடன் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆயினும் பெருமளவிலானோர் உயிரிழந்தவர்களிடையே காணாமற் போயுள்ளனர். அவர்கள் துணை இராணுவக்குழு அல்லது அரச-படைகளின் உறுப்பினர்களாக இருந்தாலும் அனைவரும் இலங்கைத் தேசத்தின் குடிமக்கள்.

காலம் கடந்த ஞானம் என எவரேனும் குறிப்பிட்டாலும் கூட, இலங்கை அரசாங்கப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் யுத்தம் இன முரண்பாடுகளுக்கானதோர் தீர்வு அல்லவென்றும், பேச்சுவார்த்தை மூலமானதொரு தீர்வே இலங்கைக்கு சமாதானத்தைக் கொண்டு வருமெனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

## மனித உரிமைகள்

ஜனவரி 21 இலிருந்து பெப்ரவரி 2009 வரையிலான காலப்பகுதிக்குரிய மனித உரிமை நிலைமைகளின் பகுப்பாய்வு

கீழேயுள்ள வரைபடம் மற்றும் அட்டவணை என்பன பல்வேறு அச்சு மற்றும் இலத்திரனியல் செய்தி மூலங்களில் தெரிவிக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மீது கவனம் செலுத்துகின்றன. (டெய்லி மிரர், ஐலண்ட், வீரகேசரி, தினக்குரல், சுடரொளி, உதயன்)




| | கைதுகள் | கடத்தல்கள் | காணாமற்போனோர் | கொல்லப்பட்டோர் | காயங்கள் |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 8 | 2 | | 5 | 51 |
| கம்பஹா | 30 | 1 | | 1 | 2 |
| அநுரா-தபுரம் | 2 | | | | |
| களுத்துறை | | | | 1 | |
| புத்தளம் | | | 1 | | |
| பதுளை | 2 | | | | |
| யாழ்ப்பாணம் | | | 1 | 3 | 1 |
| மாத்தறை | | | | 1 | 4 |
| மாத்தளை | | | 1 | 2 | |
| மட்டக்களப்பு | 3 | 1 | 1 | 9 | 20 |
| திருகோணமலை | 11 | 1 | 1 | | |
| வவுனியா | 126 | 2 | | 6 | 14 |
| மன்னார் | | | 3 | 1 | |
| அம்பாறை | | | | 1 | |
| கண்டி | 5 | | | | |
| நுவரெலியா | | | 1 | | |
| | 187 | 7 | 9 | 30 | 92 |

**முல்லைத்தீவு** (வரைபில் உள்ளடக்கப்படவில்லை)
பாதுகாப்பு வலயத்தினுள் ஷெல் வீச்சுக்களால் 1030 பொதுமக்கள் கொல்லப்பட்டும் மற்றும் 2875 பொதுமக்கள் காயமடைந்தனர். பெப்ரெவரி 10 ஆம் திகதி இனந் தெரியாதவர்களால் 17 பொதுமக்கள் வேண்டுமென்றே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**கொழும்பு**
கொழும்பு நகரினுள்ளும் மற்றும் கட்டுநாயக்கா மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களுக்கு இலக்கு வைக்க முயற்சித்தபோது இருவர் கொல்லப்பட்டும் 50 பேர் காயமடைந்தனர்.

**மட்டக்களப்பு**
பெப்ரவரி 21, காலை 7.30 மணியளவில் குண்டொன்று பொருத்தப்பட்ட துவிச்சக்கர வண்டியொன்று பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள எரிபொருள் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் வெடித்ததில் இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 10 பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களுள் ஒருவர் பொலிஸ் சார்ஜன்ட்டும் மற்றையவர் ஒரு பொதுமகனுமாவார். காயப்பட்டவர்களுள் இரு பொலிசார், நான்கு மாணவர்கள், ஒரு ஆசிரியர் மற்றும் தாதியொருவருடன் இரண்டு பொதுமக்களும் அடங்குவர்.
இனங்காணப்படாத துப்பாக்கிதாரிகளால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இலக்கு வைக்கப்பட்டனர்.

**திருகோணமலை**
மொத்தம் பதினொரு பொதுமக்கள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களென சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

**வவுனியா**
வவுனியா தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிக்கைகளின்படி வன்னியில் காயப்பட்டவர் களுடன் வவுனியா வைத்தியசாலைக்குப் பயணித்த 122 உறவினர்கள் நெலுக்குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதாக சந்தேகித்து, இந்தியாவின் சன் தொலைக்காட்சி வலையமைப்பின் உள்ளூர் ஊழியர்கள் நான்கு பேரையும் இலங்கை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

இலங்கை யுத்தப் பிரதேசத்திலிருந்து போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் பஸ் வண்டியொன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலியெனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கைக்குண்டொன்றை வீசி, துப்பாக்கியால் சுட்டதில் ஒரு பெண் கொல்லப்பட்டும் 13 பேர்கள் காயமடைந்தனர்.

**மன்னார்**
பெப்ரவரி 5 ஆம் திகதியிலிருந்து கணவன், மனைவி மற்றும் மூன்று மாதங்களே நிரம்பிய குழந்தையையும் கொண்ட குடும்பமொன்று காணாமற் போயுள்ளது.

(மேலதிக தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களை hrac1@cha.lk, hrdu2@cha.lk எனும் இணையத்தள முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்)

# பொருளாதாரச் சூழ்நிலை

குறித்த மாதத்தின்போது பொருளாதாரம் கலவையான செய்திகளைத் தந்திருந்தது. அநேகமாக அனைத்துப் பாதகமான செய்திகளும் வெளியார் துறைகளிலிருந்தே வந்திருந்தன. 2007 இல் 350 ஆடைத் தொழிற்சாலைகள் செயற்பட்டதாகவும் இதில் 60 தொடக்கம் 70 வரையிலான அநேகம் சிறிய பிரிவுகளைக் கொண்ட ஆலைகள் கடந்த 15 மாதங்களில் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் இத்துறையில் இருந்த வேலைவாய்ப்பு 300,000 இலிருந்து 280,000 ஆகக் குறைந்தும் உள்ளது. இலங்கையின் நிதி நிறுவனங்கள், உலக நிதி நிறுவனங்கள் எதிர்நோக்கும் பாதகமான சொத்துக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் இந்த நெருக்கடி இலங்கையில் வேறுபட்ட பாதகமான சொத்துக்களை உருவாக்கியுள்ளது. இவை சந்தைகளை இழந்ததினால் நஷ்டமடைகின்ற உள்ளூர்த் தொழில்களுக்கு வழங்கப்பட்டு அறிவிடப்பட முடியாதுள்ள கடன்களாகும். பிணையுறுதிகளாக வழங்கப்பட்ட இயந்திரங்களுக்குச் சந்தை வாய்ப்புகள் இல்லாததினால் வங்கிகளால் கடன்களை அறிவிட முடியாமலுள்ளது.

நாடு "போதுமானளவு" வெளிநாட்டு நாணய ஒதுக்கீட்டைக் கொண்டுள்ளதாக மத்திய வங்கி தொடர்ந்தும் உறுதிபடக் கூறிவருகிறது. 2008 இன் முடிவில் உத்தியோகபூர்வ ஒதுக்கீடு 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. -அது ஆறு வாரகால இறக்குமதியின் பெறுமதிக்குச் சமனானது- உத்தியோக பூர்வமற்ற ஒதுக்கீடுகளுடன் அதன் மொத்தத் தொகை 3.0 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். வீழ்ச்சியுறும் இறக்குமதியின் விலைகள் இதற்கு உதவின. தேயிலை, இறப்பரின் விலைகளும் சாதகமாக இல்லை. சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2009 இன் ஜனவரியில் 32% குறைவடைந்துள்ளது. இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களால் அனுப்பப்படும் பணமும் குறைவடையலாம். நேரடியான வெளிநாட்டு மூலதனம் எதிர்வருகின்ற காலங்களில் முன்னேற்றத்தைக் காட்டாது என்பதுடன் வர்த்தகக் கடன்களைப் பெறுவது சிரமமானதுடன் செலவுமிக்கதுமாகும். இலங்கை மத்திய வங்கி கடந்த மாதத்தில் ஆரம்பித்த புலம்பெயர்ந்தவர்களுக்கான கடன்முறிகளின் விற்பனை அதன் இலக்கான 500 மில்லியன் டொலர்களிற்கு அநேகமாக எட்டாது. மத்திய வங்கி நாணய மாற்றல்களுக்காகவும் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறது. இதற்கான நோக்கம், சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வேண்டிச் செல்வதைத் தவிர்ப்பதற்காகும். சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களுக்கான நிபந்தனைகள் அரசாங்கத்திற்கு ஏற்றுக்கொள்ள முடியாதவையாக அமையலாம். மத்திய வங்கியும் கடந்த மாதம் முழுவதும் ரூபாய் டொலரின் பெறுமதியை 114 ரூபாயளவில் நிலைகொள்ள வைத்திருந்தது.

வெளிநாட்டு நாணய ஒதுக்கீட்டு நிலை பலவீனமடைந்தின் அடிப்படையில் பி(f)ட்ச்(Fitch) தரப்படுத்தல் முறை இலங்கையின் நீண்டகால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய வழங்கல் நிலை தரப்படுத்தல்களை (IDRS) நிலையான

தன்மையிலிருந்து மறைநிலைக்குத் தாழ்த்தியது. இந்த மீள்தரப்படுத்தல் தேவையற்றதென மத்திய வங்கி பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தது.

கோல்டன் கீ கடன் அட்டை நிறுவனம் வீழ்ச்சியுற்றதை அடுத்து நிதி நிறுவனங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழப்பது தொடர்கிறது. சில நிதி நிறுவனங்கள் அவற்றின் வைப்புக்களை இழந்து வருவதாக உறுதிப்படுத்தப்படாத அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மேலதிகத் திரவத்தன்மை தேவையான நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை நிறுவனங்களுக்கு உதவுவதற்கு 4.25 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான ஒரு உதவித் தொகையை மத்திய வங்கி அறிவித்தது. உத்தேசிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் இந்த நிறுவனங்கள் அவர்கள் சொந்தமாகக் கொண்டுள்ள காணிகள்/இடங்களை திறைசேரி முறிகளுக்காகப் பரிமாறும் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்தத் திறைசேரி முறிகள் அவற்றுக்கான சந்தையில் கழிவு செய்யப்படலாம்.

பணவீக்க வீதம் ஜனவரி மாதத்தில் 10.7% இலிருந்து பெப்ரெவரியில் 7.6% ஆகக் குறைந்துள்ளமை அம்மாதத்திற்கான ஒரு நல்ல செய்தியாவதுடன், இது கடந்த மூன்று வருடங்களில் மாதத்திற்கான மிகக் குறைந்த வீதமாகும். இந்தக் குறைவிற்கு எண்ணெய் விலைகள் மற்றும் ஏனைய பாவனைப் பொருட்களின் விலைகளினாலான வீழ்ச்சி பெரும் பங்களித்தன. 2007 ஆம் ஆண்டின் 20% உடன் ஒப்பிடுகையில் 2008 இல் 6% ஆக வங்கிக்கடன் வளர்ச்சி வீதத்தைப் பேணிய மத்திய வங்கியின் இறுக்கமான நிதிக்கொள்கையும் பணவீக்கம் குறைந்தமைக்குப் பங்களித்தது.

கடந்த மாதம், பால் மா மற்றும் சமையல் எரிவாயு போன்ற சில பொருட்கள் மீது உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட விலை வீழ்ச்சியின் பயனை ஒரு பகுதியளவில் அரசாங்கம் பாவனையாளர்களுக்கு வழங்கியது. விலைக்குறைப்பின் ஓர் பகுதி வரி வருமானமாக அரசாங்கத்தால் தக்கவைத்துக் கொள்ளப்பட்டது.

பேரினப் பொருளியலின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு இது நல்லதொரு பொருளாதார முகாமைத்துவ முறையாகும்.

பணவீக்கம் குறைவடைந்து வருதல், கடன்களின் மீதான கட்டுப்பாட்டை மத்திய வங்கி தளர்த்துவதற்கு அனுமதித்தது. வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு அது மீள் கொள்வனவு ஒப்பந்த ஒதுக்கங்களின் வட்டி வீதத்தை 10% இலிருந்து 9.5% க்கும் மற்றும் வணிக வங்கிகளின் கட்டாய நிதி ஒதுக்கீட்டை 75 அடிப்படைப் புள்ளிகளால் 7% இற்குக் குறைத்தது. இது சுமார் 9 பில்லியன் ரூபாய்களை வங்கிகள் கடன்களாக அதிகரித்தளவில் வழங்குவதற்கான ஏதுநிலையை ஏற்படுத்தியது. பெப்ரெவரி மாதத்தில், வர்த்தக நடவடிக்கைகளுக்கான நம்பிக்கை கடந்த இரண்டு வருட காலங்களிலேயே முதற் தடவையாக அதிகமாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த மாதத்தின்போது கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்துப் பங்குகளுக்குமான விலைச்சுட்டெண் 7% ஆல் வீழ்ச்சியடைந்தது.

## சுற்றுச் சூழல்

இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ மையம் மற்றும் டயலொக் ரெலிகொம் (தனியார்) என்பற்றுக்கிடையிலானதொரு இணைவாக ஜனவரி 30 ஆம் திகதி அனர்த்த மற்றும் அவசரகால எச்சரிக்கை வலையமைப்பு (DEWN) ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பரந்த அபாய எச்சரிக்கை முறை, ஏதேனும் அனர்த்தம் எதிரே நெருங்கி வரும் சந்தர்ப்பத்தில் நாடு முழுவதற்கும் உடனடிச் செய்திகளை அனுப்புவதற்குப் பாவனையிலுள்ள கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும். செய்தியை மக்களுக்குப் பரந்தளவில் அறிவிக்க முன்னர் அவசரகால ஆளணிகளுடன் செய்தியின் உண்மைத் தன்மை பற்றி அறிந்து கொள்வது வலையமைப்பின் முதல் நிலையாகும்.

இலங்கை வர்த்தக கைத்தொழில் சங்க சம்மேளனம், உள்ளூர் கைத்தொழில்களின் பல்வேறு வகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து தனியான தொழில் முயற்சிகளை இலக்காகக் கொள்வதன் மூலம் சுற்றுச்சூழலின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியை ஆரம்பித்துள்ளது. இந்தச் செயல் திட்டத்தின் செய்முறையானது, அபிவிருத்தி செய்யப்படும் முறைகள் குறித்த ஒவ்வொரு தொழில் துறையிலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படும் எனும் நம்பிக்கையோடு சுற்றுச்சூழல் மாசடைதல் அல்லது சீர்கெடலுக்கு தற்போது பங்களிக்கின்ற கைத்தொழில் முறைகளுக்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு இணக்கமான பொதுவான கைத்தொழில் நடைமுறையொன்றின் மாதிரியை அபிவிருத்தி செய்வதாகும். இலக்காகக் கொள்ளப்பட்ட தொழில் முயற்சிகள், பொலனறுவைப் பிரதேசத்தில் விதைநெல் உற்பத்தி, மாத்தளை மாவட்டத்தில் சுண்ணாம்புச் சூளைகள், வயம்பா பிரதேசத்தில் உலர்த்திய தேங்காய் துருவல் உற்பத்தி, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் அரிசி ஆலைகள் மற்றும் நாடு முழுவதிலுமான எரிபொருள் விநி-யோகிக்கும் சேவை நிலையங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எஞ்சியுள்ள கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வரும் அதிகரித்தளவிலான இடம்பெயர்ந்த மக்களுக்கு பாதுகாப்பான இடமளிப்பதில் அரசாங்கம் முனைவது பல சுற்றுச்சூழல் விளைவுகளைக் கொண்டுள்ளது. காட்டு நிலங்களைத் துப்பரவு செய்தல், நிலத்தை அளவுக்கதிகமாகப் பயன்படுத்துதல், கழிநீர் வடிகால் மற்றும் சுகாதாரம் என்பவை சடுதியாக திட்டமிடப்படாத வகையில் மக்கள் ஒன்றுகூடுகின்றபோது துரிதமாகத் தோன்றுகின்ற முக்கியமான பிரச்சினைகளாகும். மோதல் சூழ்நிலைகளிலிருந்தான உயர் மன அழுத்தங்களில் இருந்து தப்பிய மக்களின் மோசமான ஆரோக்கியமற்ற போசாக்கு நிலை மற்றும் முகாம்களில் சனநெருக்கம் மிகுந்த நிலை என்பவை இணைந்த ஒரு சூழ்நிலையில் நோய்கள் பரவுவது ஒரு அசாதாரணமானதல்ல என்பதால் சுத்தமான குடிநீர் வழங்குவதும் முன்னுரிமைக்குரியதாகிறது. யுத்தம் இன்னமும் தொடர்வதால், நிலைமைகள் சாதாரண நிலையை அடைவதற்குப் பல மாதங்கள் அல்லது வருடங்களாகும் என்பதனால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது நீண்டதொரு செயன்முறையாக அமையப் போகிறது. முகாம்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் காலப்பகுதியும் சுற்றுச்சூழலில் ஒரு பெரும் தாக்கத்தினைக் கொண்டிருக்கப் போகிறது.

## சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் -

பெப்ரவரி மாதத்தில் சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் என்பவை பற்றிக் குறிப்பிடுவது இரண்டு காரணங்களுக்காகக் கடினமானதாகும். (அ) ஊடகங்களைப் பொறுத்தவரையில் பிரயாசையற்ற தன்மை மற்றும் சிறுபிள்ளைத் தனமானவை தவிர்க்கப்படல் வேண்டும். (ஆ) சிவில் சமூகம் ஆழமானதொரு உறக்கத்தில் அல்லது அநேகம் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்டதொரு செயலற்ற நிலையிலுள்ளது.

வடக்கில் நடைபெறும் கொடுமையான யுத்தம் அனைத்து அச்சு ஊடகங்களினதும் முன் மற்றும் கட்டுரையாக்கல் பக்கங்களிலும் அநேகமான இலத்திரனியல் ஊடகங்களின் செய்திச் சமர்ப்பணங்களிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்தன. இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பவற்றின் முழுமையான முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் மீதான விவாதங்கள் அவர்களுக்கிடையில் அகப்பட்டுள்ள ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் துன்பங்களை நீடிப்பதற்கு மட்டுமே உதவுகின்றன. சுயாதீனமான சர்வதேச அவதானிப்பாளர்களின்படி,"தமிழீழ விடுதலைப் புலிகள் அதன் கட்டுப்பாட்டிலிருக்கும் மக்கள் அங்கிருந்து வெளியேறி சண்டை நடைபெறாத பகுதிகளுக்குச் செல்வதைத் தடுத்தமை அநாவசியமானதும் அவர்களது உயிர்களை ஆபத்திலிடும் சட்ட விரோதமான செயற்பாடெனவும் குறிப்பிட்டுள்ளது. இலங்கை விமானப் படையின் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பின்வாங்குகையில் அது தன்னுடன் மக்களையும் பின்வாங்கச் செய்யக் கட்டாயப்படுத்தியமையானது அவர்கள் முகங்கொடுக்கும் ஆபத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது மட்டுமன்றி அவர்களுக்குத் தேவையான மனிதாபிமானத் தேவைகளிலிருந்தும் மேன்மேலும் அவர்களைத் தூர நகர்த்தியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் சுருங்கத் தொடங்குகின்றமை, சிக்கியுள்ள பொதுமக்களின் தொகையைச் செறிவாக்கி, படையினரின் தாக்குதல் சம்பவங்களின்போது உயிரிழப்புக்களை அதிகரிப்பதுடன் அவர்களது வாழ்க்கை நிலையிலும் பெரும் துன்பத்தை ஏற்படுத்துகிறது."*

சர்வதேச சமூகத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் ஆங்கில, சிங்கள பத்திரிகைகளின் தாள்களை நிரப்பின. எவ்வாறாயினும், சிங்கள அச்சு ஊடகத்தைப் பொறுத்தவரை தமிழ் பொதுமக்களின் மனிதாபிமான அவலங்கள் மீதான முக்கியத்துவம் மாகாணசபைத் தேர்தல்களினால் மழுங்கடிக்கப்பட்டன. இது நிச்சயமாக வேண்டுமென்றோ அல்லது உள்நோக்குடனற்றதாகவோ இருக்கலாம். இது அநேகம் அவ்வூடகங்களின் உணர்திறனற்ற நிலையாகவும் இருக்கலாம். இது நிச்சயமல்ல. ஆனாலுமொரு சாத்தியமே.

இரண்டாவது அவதானிப்பு எதிர்காலத்தின் மீதானதொரு நிச்சயமற்ற தன்மை மீதான பார்வைக்கு அனுமதிக்கிறது. "ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தொடர்ந்தும் சிங்கள-பௌத்த கருத்தியல்புகளிலேயே தீவிரமாகவுள்ளது……" என்பதுடன் மீண்டும், "எதிர்வரும் மேல்மாகாணத் தேர்தல்களில் சிறுபான்மையினர் அதிகமுள்ள கொழும்பு நகரம், பேருவளை மற்றும் நீர்கொழும்பு போன்ற தேர்தல் தொகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது கருத்தியலில் எவ்விதம் இணக்கப்பாட்டைக் காணப்போகின்றதென்பதை இனிமேல்தான் பார்க்க வேண்டுமென" அது குறிப்பிடுகிறது. இந்த ஆசிரியர் தலையங்கம் பற்றிக் குறிப்பிடுவது அதன் அரசியல் உள்ளடக்கத்திற்காகவல்ல. இது, அதே தினமான பெப்ரவரி 16 அன்று லங்காதீப சிங்களப் பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்துடன் ஒப்பிடுவதற்காகும். லங்காதீப ஆசிரியர் தலையங்கம் வாக்களிக்கும் நிலையத்திலே வாக்குகளை எண்ணும் ஒரு பிரேரணையை பாராட்டிக் குறிப்பிட்டுள்ளது. அது கொழும்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச விவகாரங் களிற்கான பேராசிரியரான கலாநிதி.

டபிள்யூ.எம். கருணதாசா என்பவரால் வடமத்திய மற்றும் மத்திய மாகாணசபைத் தேர்தல் பெறுபேறுகள் பற்றியதோர் நீண்ட பகுப்பாய்வுடன் தொடர்ந்தது. ஜனாதிபதி பராக் ஒபாமா பெற்றுக் கொண்ட வாக்குகளின் பெறுபேற்றுடன் ஒப்பிட்டு பேராசிரியர் தனது கட்டுரையின் இறுதியில் ஓர் சுவாரசியமான அவதானத்தைக் குறிப்பிடுகிறார். "இன்றுவரை நாங்கள் ஒரு பலவீனமான அரசாங்கத்தையும் ஓர் பலமான எதிர்க்கட்சியையும் கொண்டிருந்தோம். ஆனால் இந்தத் தன்மைகளுடன் இனிமேல் பலமானதொரு அரசாங்கமும் பலவீனமானதோர் எதிர்க்கட்சியுமிருக்கும். இதுதான் நாட்டிற்குத் தேவை. இந்த நாட்டுக்கு ஜனநாயகத்தினுள்ளேயானதொரு சர்வாதிகாரம் தேவை. சர்வாதிகாரம் எனும் சொல், ஒரு ஸ்திரத்தன்மையற்ற நிலையிலல்லாமல் தீர்மானங்களை மேற்கொள்ளுதலைக் கருதுகிறது". முன்னர் குறிப்பிட்டது போன்று சிவில் சமூகம் ஆழமானதொரு உறக்கத்தில் அல்லது ஓர் செயலற்ற நிலையிலுள்ளது.

* மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கலாநிதி. அனா நெய்ஸ்ரற், 24 பெப்ரவரி 2009.

# மனிதநேயம் மற்றும் அபிவிருத்திக்கான இடம்

வடக்கு

தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழுள்ள பகுதிகள் கணிசமாகச் சுருங்கி வருகையில் அங்கு அதிகரித்த மோதல் நிலைமைகளோடு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அதன் ஜனவரி 28, செய்தி வெளியீட்டில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், காயப்பட்டுமுள்ளதுடன் தேவைகளை நிறைவேற்றுவதற்கான போதியளவிலான மருத்துவ வசதிகள் மற்றும் ஊழியர்கள் என்பவை இல்லாமை குறித்து பொதுமக்களின் பாதுகாப்பு மீதான கரிசனையை வெளிப்படுத்தியது. பொது மக்களின் பாதுகாப்பானதும், தன்னிச்சையானதுமான நடமாட்டத்திற்கு வசதிகளை ஏற்படுத்தும்படி இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரையும் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர். மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பும் மற்றும் கரிசனங்கொண்ட நிறுவனங்களும் கூட இதேபோன்றதொரு கரிசனத்தை எழுப்பியதுடன், மோதல் பகுதியிலிருந்து தப்பியோடி வரும் மக்களை சர்வதேச தரங்களுக்கமைவாக வரவேற்பதை உறுதிப்படுத்தும்படி அரசாங்கத்தை வேண்டிக் கொண்டன.

இணைத்தலைமை நன்கொடை நாடுகளான நோர்வே, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன மோதல்களை நிறுத்துவதற்கான வழி முறைகளைக் கலந்துரையாடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளை வேண்டின. இலங்கை அரசாங்கம் அதன் பங்கிற்கு மன்னிப்பு வழங்குவதை நிராகரித்ததுடன் ஆயுதங்களைக் கீழே வைத்து நிபந்தனைகளற்ற சரணடை-தலை வேண்டியது.

இடம்பெயர்ந்த மக்கள் வவுனியாவிலுள்ள பாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகக் கட்டிடங்கள் உட்பட 13 இடங்களிலும், யாழ்ப்பாணத்தில் 4 இடங்களிலும் மற்றும் மன்னாரில் 3 இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அனைத்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் மீள்குடியேற்ற அமைச்சினால் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் ஊடாக சமைத்த உணவு வழங்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ்வரும் முகவரமைப்புகளுடன் மூன்று செயலணிக் குழுக்களால் ஏற்படுத்தப்பட்டன.

1. தங்குமிடம் மற்றும் என் எவ் ஆர் ஐ - யு.என்.எச்.சி.ஆர்
2. சுகாதாரம், கல்வி, வற்சன் - யுனிசெப்
3. உணவு - உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை அரசாங்கம் ஒவ்வொன்றும் 300 ஏக்கர்கள் கொண்ட மூன்று நிவாரணக் கிராமங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. வவுனியா மற்றும் மன்னாரில் 1000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடங்கள் தெரிவு செய்யப்பட்டு துப்பரவு செய்யப்படுகின்றன.
அரசாங்கம், இடம்பெயர்ந்தவர்களின் நலன்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கான பொறுப்பை எடுத்துக் கொண்டுள்ளது. இந்தப் பகுதிகளில் பணியாற்றுவதற்கு சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களை புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடுமாறு மீள்குடியேற்ற அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. மீள்குடியேற்ற அமைச்சுடன் ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடுமாறு அரச சார்பற்ற ஸ்தாபனங்களுக்குக் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தத்தில் கை-யெழுத்திடுவோர் மட்டுமே பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

பெப்ரவரி 17 திகதியன்று, வவுனியாவின் 13 நலன்புரி மையங்களில் 7832 குடும்பங்களைச் சேர்ந்த 30,517 பேர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. யு.என்.எச்.சி.ஆர் மற்றும் ஐ.சி.ஆர்.சி என்பன இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள இடங்களுக்குச் செல்வதற்கு முழுமையான அனுமதியைக் கொண்டுள்ளன. ஆயினும் ஓமந்தையிலுள்ள நுழைதல்/வெளிச் செல்லுதலைப் பதிவு செய்யும் இடத்திற்கல்ல. யு.என்.எச்.சி.ஆர் பதிவு செய்யும் செயன்முறைகளுக்கான வழி-வகைகள் மற்றும் பாதுகாப்புப் படைகளை முகாம்களிற்கு உள்ளே இருத்தாமல் முகாமிற்கு வெளியே நிறுத்த வேண்டிய தேவை மற்றும் முகாம் நிர்வாகத்தைச் சிவில் அதிகாரிகளிடம் மாற்றுவது குறித்தும் ஆலோசனை தெரிவித்து வருகிறது.

ஐ.சி.ஆர்.சி காயப்பட்டவர்களுள் மொத்தம் 1212 பேர்களை பெப்ரெவரி 10 முதல் 20 ஆம் திகதிவரை முல்லைத்தீவிலிருந்து திருகோணமலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளுக்குக் கப்பல் மூலம் அழைத்து வந்தது.

தரைவழி மூலம் வாகனத் தொடரணிகள் செல்வது கடினமாகியுள்ளதால், ஐ.சி.ஆர்.சி கொடி பறக்கவிடப்பட்டுள்ள கப்பல்களில் கடல் மூலம் உணவுப் பங்கீட்டுப் பொருட்கள் புதுமாத்தளன் பகுதிக்கு அனுப்பப்பட்டன. பெப்ரெவரி 10 ஆம் திகதியிலிருந்து இவ்விதம் 4 கப்பல்கள் மூலம் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குப் பொருட்கள் அனுப்பப்பட்டதுடன் காயமடைந்தவர்கள் திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

முல்லைத்தீவில் இடம்பெயர்ந்தவர்கள் வருவதற்கான மையமொன்றில் தற்கொலைக் குண்டுதாரியொருவர் தன்னைத்தானே வெடிக்க வைத்ததில் 20 இராணுவத்தினர் உட்பட 30 பேர்கள் கொல்லப்பட்டனர். ஐ.நா மற்றும் ஏனையவர்கள் இந்தத் தாக்குதலுக்கு வருத்தம் தெரிவித்ததுடன் மக்களை இலக்கு வைக்கும் தாக்குதல்களைத் தவிர்க்குமாறும் வேண்டினர். குடும்பங்களிலிருந்து பிரிந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கு யு.என்.எச்.சி.ஆர், ஐ.சி.ஆர்.சி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என்பன இணைந்து அவற்றினூடாக வன்னிப் பகுதியினுள் உள்ள குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் இருக்குமிடம் என்பவை பற்றிய செய்திகளை வன்னிக்கு வெளியேயுள்ள குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புபடுத்தும் முறை மூலம் நிலைநாட்டுகிறது.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் கீழ் மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசரகால நிவாரண ஒருங்கிணைப்பாளர் சேர் ஜோன் ஹோம்ஸ் அவர்கள் ஒரு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு பெப்ரவரி 19 ஆம் திகதி இலங்கைக்கு வந்தார். மோதல் பகுதியில் உணவு விநியோகம் மற்றும் மருத்துவ வசதிகளின்றிச் சிக்கியுள்ள மக்களின் மனிதாபிமான நிலைமை மற்றும் பாதுகாப்பு மீதான கரிசனையின் பேரில் அவர் நாட்டுக்கு விஜயம் செய்தார். ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர், பாதுகாப்புச் செயலாளர், வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றுக்கான அமைச்சர்கள் உட்பட முக்கியமான அராங்க அதிகாரிகளையும் சந்தித்தார். இந்தச் சந்திப்புக்களின்போது மோதல் பகுதிகளிலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக் கடந்துவரும் மக்கள் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு அமைவாக வரவேற்கப்படுவதை அரசாங்கத் தரப்புக்கு வலியுறுத்தியதுடன் மக்கள் தாம் விரும்பிய பகுதிகளுக்குச் சுதந்திரமாக இடம் மாறிச் செல்வதற்கு அனுமதிக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வேண்டிக் கொண்டார். அவர் ஜனாதிபதியைச் சந்தித்ததுடன் இச்சந்திப்பில் மோதல் பகுதியிலுள்ள மக்களின் அவலநிலை மற்றும் உணவு மற்றும் மருந்து வகைகளின் அதிகரித்த விநி-யோகத்தின் தேவை என்பவை பற்றியும் கலந்துரையாடினார்.

சேர் ஜோன் ஹோம்ஸ், வவுனியாவிற்கு அண்மையில் இடம்பெயர்ந்து வந்த 30,000 மக்களின் நலன்கள் மற்றும் தேவைகள் என்பவை தொடர்பாக கண்டறிவதற்கு ஐ.நா மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் என்பவற்றுடன் இணைந்து வவுனியாவிற்கு ஒரு விஜயத்தை மேற்கொண்டார். ஆட்களைப் பதிவு செய்தல் ஒளிவுமறைவின்றிய வகையில் மேற்கொள்ளப்படல், குடும்பங்கள் மீள் ஒன்றுசேரல், நடமாட்டங் களுக்கான கூடுதல் சுதந்திரம் மற்றும் முகாம் சிவில் அதிகாரிகளால் நிர்வகிக்கப் படுதல் என்பன முக்கியமான பிரச்சினைகளாகவும் முன்னிருக்கும் சவால்களாகவும் உள்ளன.

மோதல் பகுதிகளிலிருந்து தப்பி வருவோர்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கென 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பங்களிப்பை அவசரகால நிவாரணங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் அறிவித்தார்.

கிழக்கு

மட்டக்களப்பு

மட்டக்களப்பு பகுதிகளுக்கான மீள்குடியேற்றத் திட்டம் தயாராகவுள்ளது. குடும்பி மலைப்பகுதி நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு இடர்வாய்ப்புக் குறைவான பகுதியென சான்று வழங்கப்பட்டுள்ளது. சென்று பார்த்து வருவதற்கான விஜயங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. ஆயினும் பாதுகாப்பு அனுமதி பெறப்படல் வேண்டும். காட்டுப் பகுதிகளைச் சுத்தம் செய்வதற்குப் பணியாளர்கள் இன்மையால் செங்கலடிப் பிரிவின் இறால்குளம் பகுதியில் மீள்குடியேற்றம் தாமதமாகியுள்ளது.

திருகோணமலை
இளவாலை மற்றும் நவரட்ணபுரம் ஆகிய பகுதிகளில் 240 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளன. இக்குடும்பங்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஒரு முகவரமைப்பு இணங்கியுள்ளது. மாற்றிடம் வழங்கப்பட வேண்டியுள்ள குடும்பங்களுக்கு மாற்றிடம் வழங்க வேண்டிய பகுதிகளில் 1400 வீடுகள் கட்டப்பட வேண்டியுள்ளன. இக்குடும்பங்களுக்கான வீட்டு வசதிகளுக்கு உறுதியான நன்கொடையாளர்கள் இதுவரை கிடைக்கவில்லை.

பொதுவானவை
தெற்காசியாவில் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் இளம் பிள்ளைகளின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் புத்தாக்க யோசனைகளைக் கண்டு பிடித்து நிதியளிக்கும் இலக்கோடு போசாக்கிற்கான ஓர் போட்டித்தன்மையான அபிவிருத்திச் சந்தையை உலக வங்கி ஆரம்பித்துள்ளது. அண்மையில் நிறைவு செய்யப்பட்ட சனத்தொகை மற்றும் சுகாதார மதிப்பாய்வொன்று இலங்கையில் 5 வயதிற்கும் குறைவான சிறுவர்களில் 22% நிறை குறைவு கொண்டவர்களாகவும் 18% மிகவும் உயரம் குன்றியவர்களாகவும், 15% மிகவும் உடல் நலிவுற்றவர்களாகவும் இருப்பதாகத் தெரிவிக்கிறது.

## வெளிச் செயற்பாட்டாளர்கள்

நாடு, முல்லைத்தீவில் ஒரு தீர்மானம் மிக்க நிலைப்பாட்டுடன் நுழைவதுடன் வெளிச் செயற்பாட்டாளர்களின் பங்கும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. மனித நேயம் மீதான கரிசனைகள் சேர் ஜோன் ஹோம்ஸ் அவர்களின் விஜயத்தைத் தூண்டியதுடன் ஐ.நா செயலாளர் நாயகத்திற்கு விளக்கமளிப்பதற்காக அவர் வருகை தந்திருந்தார். இலங்கைக்கான ஓர் சிறப்புத் தூதுவரை நியமிக்கும் ஐக்கிய இராச்சியத்தின் முயற்சி குழப்பத்தில் முடிவடைந்துள்ளது. இணைத்தலைமை நாடுகள் யுத்தத்தை முடிவுறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு நிலை மாற்றத்திற்கு வேண்டுகோள் விடுத்தது. முற்றிலும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியாத இந்தியாவின் நிலைப்பாடு, அதனொரு புதிய கூற்றில் சண்டை நிறுத்தத்துக்குக் கோரியது. மனித உரிமைகளின் தரம் தொடர்பாக நாடு முழுமையான விமர்சனங்களுக்குள்ளாகியது. ஐ.நா குடும்பமும் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் என்பன வவுனியாவில் அவசர செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் முழுமையாக ஈடுபட்டிருக்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முல்லைத்தீவில் பயனுள்ள சேவைகளையாற்றி வருகிறது. இலங்கையின் நிலைமைகளைக் கேட்டு அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை கடுமையான மூன்று சமர்ப்பணங்களைக் கொண்டு வந்த வேளையில், அதிகார பீடத்தின் கருத்துக்களும் அதற்குச் சமனான வகையில் வலுவானவையாக இருந்தன.

# மாவட்ட ரீதியிலான பகுப்பாய்வுகள் ஜனவரி 28 – 28 பெப்ரெவரி 2009

## அம்பாறை

களநிலைமைகள்
கரமிட்டியாவக் கிராமத்தின் மீதான கொடூரமான அண்மைய தாக்குதலில் 21 கிராமத்தவர்கள் கொல்லப்பட்டமை, சில மாதங்களாக நிலவிய அமைதி நிலையின் பின்னர் நிகழ்ந்ததினால் மாவட்டம் அதிர்ச்சியடைந்துள்ளது. இத்தாக்குதல் மக்களை அதிர்ச்சியுற வைத்த வேளையில், எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பும் முன்னில்லாத வகையில் கேள்விக்குள்ளானது. மக்கள் எதற்காகவும் தங்கள் வீடுகளை விட்டு வெளியில் வருவதற்கு மீண்டும் அச்சமடைகின்றனர் என்பதுடன் இதனால் முக்கியமாகப் பாதிக்கப்பட்டவையுள் மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் குறைவடைந்து போயுள்ளமையைக் காணமுடிகிறது. இதேசமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலுக்கான பொறுப்பை மறுத்துள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினுள்ளும் பதட்டங்கள் அதிகரிக்கின்றமையால், இந்தப் பதட்டம் மாவட்டத்தில் வன்முறைகளாக மாறுதலடையக்கூடும் என்கின்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர்.

நன்கொடை முகவர்கள் மற்றும் நாடுகளின் உதவிகளோடு, விசேடமாக வீதி நிர்மாணம் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் தொடர்வதில் உள்ளூர் அரசியல்வாதிகளின் ஈடுபாட்டின் உதவியோடு சமூக உறவுகள் மேம்படுவது போலத் தெரிகிறது.

**செயற்பாட்டாளர்கள்**
தற்போதைய சூழ்நிலையில், அரச பாதுகாப்பு படைகள், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தலைவர் மற்றும் முதலமைச்சர், அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவரமைப்புகள் என்பன பிரதான செயற்பாட்டாளர்களாகக் கருதப்படமுடியும்.

மாற்றங்கள்
கரமிட்டியாவ கிராமத்தின் மீதான கொடூரமான தாக்குதல்களில் 21 கிராமத்தவர்கள் கொல்லப்பட்டமை மாவட்டத்தின் நிலைமைகளைப் பெருமளவில் பாதித்தது. இச்சம்பவம், சமூகங்களின் மத்தியில் நிலவிய பலவீனமான அமைதி நிலையில் ஒரு நீண்டகால தாக்கத்தைக் கொண்டிருக்கக் கூடுமென்பதுடன் அதனையும்விட மாவட்டத்தின் ஸ்திரத்தன்மையின்மைக்கும் பங்களிக்கக் கூடும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கிடையில் அதிகரிக்கும் பிளவும் மாவட்டத்தில் ஓர் முக்கியமான காரணியாக உள்ளதுடன் கட்சியினுள் அதிகரிக்கும் உட்பூசலின் விளைவுகள் மாவட்டத்தில் வன்முறைகளாக வெடிக்கலாம் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**
அபிவிருத்தியை ஏற்படுத்தி மாவட்டத்தின் நிலையை மேம்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக ஸ்தாபனங்கள் என்பன தங்களின் இணைந்த முயற்சிகளை முதலீடு செய்வதினால் சமூக உறவுகளைக் கட்டியெழுப்புவதில் அரசாங்கம் முன்னெடுத்த அம்பாறையைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம் ஒரு ஊக்கியாக செயல்பட்டது.

எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்படல் வேண்டுமென்பதுடன் எதிர் காலத்தில் இதுபோன்ற தாக்குதல்களிற்கெதிராக தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கிராமத்தவர்களுக்கு அபாய எச்சரிக்கை முறையொன்றை ஏற்படுத்துவதற்கேற்ற வகையில் வசதியளிக்கப்படுவது அவசியம். இதன் மூலம் இத்தகையதோர் தாக்குதல் சம்பவத்தின்போது அவ்விடத்திற்கு உதவிக்காகப் பாதுகாப்பு படைகள் வரக்கூடியதாக இருக்கும்.

## மட்டக்களப்பு

களநிலைமைகள்
அம்பாறை எல்லைக் கிராமத்தின் மீதான தாக்குதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதட்டங்களை அதிகரித்துள்ளது. கருணாவை கட்சித் தலைமையிலிருந்தும், அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் இனியபாரதியை கட்சியை விட்டும் நீக்கியமையினால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினுள் ஏற்பட்டுள்ள பதட்டம் என்பன மட்டக்களப்பு வாழ் மக்களின் கலந்துரையாடல்கள் மற்றும் கற்பனைகளுக்குமுரிய விடயமாகியுள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முன்னணி ஆதரவாளர்கள் பலர் அண்மையில் கொல்லப்பட்டதுடன், ஏனைய எழுந்தமான வகையிலான கொலைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அரச பணித்துறை ஆட்சி முறைகள் மற்றும் நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக பல அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் தங்களது செயல் திட்டங்களைக் குறைத்து வருவதினால் தங்களது ஊழியர்களிலும் ஆட்குறைப்பைச் செய்துள்ளன. இது புதிதாக வேலையிழந்தவர்கள் மத்தியில் அமைதியின்மை மற்றும் திருப்தியின்மை என்பவற்றை ஏற்படுத்துவதுடன் மாவட்டத்தின் முன்னைய அனுபவங்களைக் கொண்டு நோக்குகையில் பதட்டங்களையும் உருவாக்கலாம். செயல் திட்ட அமுல்படுத்தல்களின் முன்னேற்றத்திற்கு அபிவிருத்தி முகவரமைப்புகளின் பங்களிப்பு அவசியமென்பதால் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளையும் இது பாதித்துள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் பல சிறுவர் போராளிகள் விடுவிக்கப் பட்டதுடன் கட்சியிலுள்ள அனைத்துச் சிறுவர் போராளிகளும் விடுவிக்கப்படுவரென அக்கட்சியின் தலைவர் கருணா உறுதியளித்தார். எவ்வாறாயினும், கட்சித் தலைமையிலிருந்து கருணா நீக்கப்பட்டமையினால் இந்த வாக்குறுதி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தற்போதைய கட்சித் தலைவரால் நிறைவேற்றப்படுமா என்பது கேள்விக்குள்ளாகியுள்ளது.

**செயற்பாட்டாளர்கள்**
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முன்னாள் கட்சித் தலைவர், மாகாணசபை முதலமைச்சர், அரச பாதுகாப்பு படைகள், அரசியல்வாதிகள், மனிதநேய மற்றும் நிவாரண முகவரமைப்புகள் மற்றும் மாவட்டத்தில் செயற்படும் துணை இராணுவக் குழுக்கள் என்பன பிரதான செயற்பாட்டாளர்களாவர்.

**மாற்றங்கள்**
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைமைத்துவத்திலிருந்து கருணாவை நீக்கியமை மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து கொள்கின்ற நோக்கம் பற்றிய கருணாவின் அறிக்கை மற்றும் அதன் பின்விளைவுகள் என்பன மாவட்டத்தில் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படும் விடயமாகியுள்ளது. இந்த நடவடிக்கை, கருணாவின் ஆதரவாளர்கள் மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஏனைய தலைவர்களின் ஆதரவாளர்களுக்கு இடையில் அதிகரித்த பதட்டத்தை அநேகமாக உருவாக்கலாம். பல சிறுவர் போராளிகளை விடுவித்தமை மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளிலுள்ள அனைத்துச் சிறுவர் போராளிகளையும் விடுவிப்பதற்கான வாக்குறுதி என்பன பல பெற்றோர்கள் மத்தியில் நம்பிக்கையானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தின. ஆயினும் கட்சியின் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றம் அளிக்கப்பட்ட வாக்குறுதியை கேள்விக்குள்ளாக்கியுள்ளதுடன் இந்தப் பெற்றோர்கள் மத்தியில் கவலையையும் அதிகரித்துள்ளது.

**வேலையில்லாமை,** விசேடமாக இளைஞர்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளதினால் அதிகரித்தளவிலான வேலையின்மையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய காரணியாகின்றது.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**
அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் பணியாற்றுவதற்கான பாதுகாப்பான நிலைமைகள் அதேபோன்று அரச அலுவலகங்களில் காணப்படும் அதீத கெடுபிடிகளைக் குறைத்தல் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கு இயலுமாயின் அது இந்த முகவரமைப்புகள் அவற்றின் பணிகளை மேலும் வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்கு உதவும். இதன் விளைவாக அபிவிருத்திப் பணிகள் மேலும் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன் அரச சார்பற்ற ஸ்தாபனங்களும் பெரிதளவில் செயலாற்ற உதவி அதன் ஊழியர்களையும் தக்க வைத்துக் கொள்ள உதவும். இது அபிவிருத்திச் செயற்பாடுகளைத் துரிதமாக்கும் அதேசமயம் மாவட்டத்தில் வேலைவாய்ப்புக்களையும் அளிக்கும்.

மாவட்டத்திலுள்ள பொதுமக்களிடையே அமைதியை உறுதிப்படுத்துவதற்காக சமூகங்களுக்கிடையில் உறவுநிலைகளை விருத்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மனிதநேய முகவரமைப்புகள் என்பன தங்களால் இயலுமானவற்றை மேற்கொள்ள வேண்டுமென்பதும் அவசியமாகும்.

# கொழும்பு

**களநிலைமைகள்**
கொழும்பு மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் முயற்சி, நகரத்தின் பாதுகாப்பு மாயையை மீண்டுமொரு தடவை உலுக்கியெடுத்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு சில சதுர கிலோ மீற்றர் பரப்பளவிற்குள் முடக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றதொரு நிலையில் புலிகளின் தொடர்ச்சியான வான் தாக்குதல் திறன் விவாதத்திற்குரிய மையப்பொருளாக இருந்தது. இந்த விமானங்கள் ஒவ்வொன்றும் 200 கிலோ வெடிமருந்துகள் நிரப்பப்பட்டவையாக இருந்தனவென தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலினால் இருவர் கொல்லப்பட்டதுடன் 50க்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்தனர்.

எதிர்வரும் மேல் மாகாணசபை தேர்தல்கள், மாகாணத்தில் அரசியல் கட்சிகளின் அநேகமான நேரத்தையும், முயற்சியையும் எடுக்கின்றன.

தேசத்திற்கான மகுடம் கண்காட்சியும் நகரில் ஒரு பிரதான நிகழ்வாக அமைந்திருந்தது. 100,000 அளவிலானோர் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர், இதில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சண்டைகளில் மீட்கப்பட்ட சில ஆயுதங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஏனைய பொருட்களுடன் காண்பிக்கப்பட்டன.

இதேவேளை மாவட்டத்தில் டெங்கு பரவும் சம்பவங்களில் காணப்படும் அதிகரிப்பும் கரிசனைக்குரிய விடயமாவதுடன் கொழும்பு மாநகரசபை நுளம்பு பரவும் இடங்களை சுத்தம் செய்வதுடன் அழித்து விடுவதையும் உறுதி செய்யும்படி பொதுமக்களைத் திரும்பத் திரும்ப அறிவுறுத்தி வருகிறது.

**செயற்பாட்டாளர்கள்**
தமிழீழ விடுதலைப் புலிகள், அரச பாதுகாப்பு படைகள், அரசியல் கட்சிகள் என்பன தற்போதைய சூழ்நிலையில் முக்கியமான செயற்பாட்டாளர்களாவர்.

**மாற்றங்கள்**
தலைநகர் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் முற்றுப்பெறாத வான்தாக்குதல் மாவட்டத்தில் மக்கள் மீதான பாதுகாப்பு மாயையை மீண்டுமொரு முறை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. யுத்த நிலைமை மேலும் தீவிரமடைகையில், இதற்கான எதிர்விளைவாக மேலும் வான்தாக்குதல் வடிவில் நடைபெறலாமென்கின்ற அச்சத்தினால் நகரில் பதட்டம் அதிகரிக்கிறது. அரசாங்கம் உறுதியளித்துள்ளது போல இந்த வருடத்தின் ஏப்பிரல் மாத இறுதியளவில் யுத்தம் முடிவடைந்து விடுமென மாவட்டத்திலுள்ள பெரும்பான்மை மக்கள் நம்புகின்றனர். இதில் ஏராளமானவர்கள் நம்பிக்கையற்றுமுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு தொடர்ந்தும் அதிகரிப்பதுடன் மக்கள் அதிகரிக்கும் சுமையின் கீழ் தள்ளாடுகின்றனர். சமையல் எரிவாயுவின் விலை ரூபா 300- க்கும் அதிகமான தொகையால் குறைந்தமை பொதுமக்களுக்கு சற்று ஆறுதலையளித்துள்ளது. ஆயினும் இதனுடன் தொடர்புபட்ட பொருட்கள் மற்றும் சேவைகளிலான விலைகளிலான குறைப்பை இன்னமும் காணமுடியவில்லை.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**
தொடர்ச்சியான விழிப்புநிலை மற்றும் அதேபோன்று நகரிலுள்ள பாதுகாப்பு பகுதிகளிலிருந்து விலகியிருத்தல் போன்ற பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளின் தேவைகளுக்கு மக்கள் தொடர்ச்சியாக நினைவூட்டப்படல் வேண்டும்.

நகரிலுள்ள வீடுகள் மற்றும் பொதுவிடங்கள் என்பன சுத்தமாகப் பேணப்பட்டு, டெங்கு மற்றும் சிக்கன்குனியா பரவுவதைத் தடுக்கும் முகமாக நுளம்புகளற்ற விதமாக இருப்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

# யாழ்ப்பாணம்

**களநிலைமைகள்**
அரச துருப்புக்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கிடையில் சண்டைகள் நடைபெறுவதால் முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பெருந்தொகையான மக்கள் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு மாதங்களின்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவிற்கிடையில் போக்குவரத்துச் செய்த பொதுமக்களின் அவலநிலை குறித்து பல சர்வதேச ஸ்தாபனங்கள் தங்கள் கரிசனைகளை வெளிப்படுத்தின. மொத்தம் 700 குடும்பங்கள் படகுகள் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களாகக் காட்டிக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவுவதைத் தடுக்கின்ற முக்கிய கவனத்துடன் குடாநாட்டில் பாதுகாப்பு நிலைமைகள் இறுக்கமாக இருப்பதுடன் இடையிடையே சுற்றிவளைப்புகள் மற்றும் சோதனை நடவடிக்கைகள் தொடர்கின்றன.

கடுமையான பாதுகாப்பு மற்றும் சண்டைகள் காரணமாக துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் சற்றுக் குறைவடைந்துள்ளதுடன், பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகமும் ஒப்பீட்டளவில் கூடுதலாகவுள்ளது. பொருட்களுக்கான போக்குவரத்துக்கு ஏ9 வீதியும் திறக்கப்படுமிடத்து பொருட்களின் விலைகள் மேலும் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**செயற்பாட்டாளர்கள்**
தற்போதைய சூழ்நிலையில் அரச பாதுகாப்பு படையினர், தமிழீழ விடுதலைப் புலிகள் அதேபோன்று உள்ளக இடம்பெயர்வுக்குள்ளாகிய மக்கள் போன்றவர்கள் பிரதான செயற்பாட்டாளர்களாவர்.

**மாற்றங்கள்**
முல்லைத்தீவில் சிக்கியுள்ள மக்களின் அவலநிலை மாவட்டத்திலுள்ள மக்களின் பெரும் விசனத்திற்குரியதோர் விடயமாகவுள்ளது. எதிர்வரும் மாதங்களில் யுத்தம் மேலும் தீவிரமடையலாமென எதிர்பார்ப்பதினால் மக்கள் முல்லைத்தீவிலுள்ள தங்களது உறவினர்களின் நிலை குறித்துப் பெரிதும் கவலை கொண்டுள்ளனர். மனிதநேய ஸ்தாபனங்கள் பொதுமக்களின் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும்படியும் அவர்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கு அனுமதிக்கும்படியும் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கத்தை வேண்டி நிற்கின்றன.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**
வடக்கில் யுத்தம் தீவிரமடைவதால் இடம்பெயர்ந்து வரும் மக்களின் சடுதியான அதிகரிப்பைக் கையாள்வதற்கு அரசாங்கம் மற்றும் மனிதநேய முகவரமைப்புகள் தயாராக இருத்தல் வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தற்போதுள்ள இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்காக இனங்காணப்பட்ட பகுதிகளில் நிலக்கண்ணி வெடி அகற்றும் செயன்முறைகளைத் துரிதப்படுத்தி புதிதாக வரும் இடம்பெயர்ந்த மக்களுக்கு இடங்களை ஏற்படுத்துதல் வேண்டும். இது இடம் பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம் மற்றும் ஏனைய நன்கொடை முகவரமைப்புகளின் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் சுமையைக் குறைப்பதற்கு உதவும்.

பெரும் மன மற்றும் உடல் ரீதியான துன்பங்களுக்காளான இடம்பெயர்ந்த மக்களுக்கான பௌதீகத் தேவைகளை வழங்குவதைப் போன்ற முக்கியத்துவம் கொண்டதே பெரும்பாலான இடம்பெயர்ந்த மக்களுக்கு உளவியல் ரீதியான உள நலத்துணை ஆலோசனைகள் வழங்குவதென்பதும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

## மன்னார்

**களநிலைமைகள்**
வடக்கில் இலங்கை இராணுவம், போராளிகளின் இடங்களுக்குள் முன்னேறுவதினால் மன்னார் மாவட்டத்திற்குள் வரும் இடம்பெயர்ந்த மக்களின் தொகையும் அதிகரித்துள்ளது.
புதிதாக இடம்பெயர்ந்து வந்த 800 க்கும் அதிகமான மக்களுக்காக மூன்று மேலதிக முகாம்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் விசுவமடு மற்றும் உடையார்கட்டுப் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்படுவதற்காக போக்குவரத்துக்குக் காத்திருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. 100 க்கும் மேற்பட்ட நோயாளிகளும் வவுனியா வைத்தியசாலையிலிருந்து மன்னார் வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டனர். இதேவேளை மேலும் சில நூறு பேர் திருகோணமலையிலிருந்து வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த சில வாரங்களில் குடியிருப்பாளர்கள் பலர் டெங்கு, சிக்கன்குனியா நோய்களுக்காகச் சிகிச்சையளிக்கப்பட்டனர்.

முசலிப் பகுதியில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னதாக வீடுகளை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்ட உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் தற்போது விரைவான மீள்குடியேற்றத்திற்காகக் கோரி வருகின்றனர். எவ்வாறாயினும், மீள்குடியேற்றத் திற்காக ஒதுக்கப்பட்ட காணிகளில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படும்வரை இது சாத்தியமில்லையென அரசு தெரிவித்துள்ளது.

**பிரதேசத்தில் பாதுகாப்பு** பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மக்கள் நடமாட்டம் விசேடமாக வடக்கிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கையடக்கத் தொலைபேசி மற்றும் சிடிஎம்ஏ தொலைபேசிச் சேவைகள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிலையங்களின் செய்தி ஒளிபரப்புகள் என்பன துண்டிக்கப்பட்டுள்ளன.

குற்ற விலக்களிப்புடன் இந்தப் பகுதிகளில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்கள் வர்த்தகர்களிடமிருந்து மாதாந்தம் பணத்தைக் கப்பமாகப் பெறுவதற்கு சந்திப்புக்களை நடாத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் செயல் திட்ட சேவைகளுக்கான அலுவலகம், மன்னாரில் வடிகால் செயல் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இது இப்பிரதேசத்திலுள்ள இளைஞர்கள் பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. ஆயுதப்படைகள் மற்றும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவுகளிலும் சிறிது முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

**செயற்பாட்டாளர்கள்**
தற்போதைய சூழ்நிலையில், அரச பாதுகாப்பு படைகள், மனிதநேய மற்றும் நிவாரண ஸ்தாபனங்கள், உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் இப்பிரதேசத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்கள் என்பன பிரதான செயற்பாட்டாளர்களாவர்.

**மாற்றங்கள்**
பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமையால் சண்டையில் அதிகரிப்பு ஏற்படலாமென்கின்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருப்பதால் இது மக்கள் மத்தியில் சில கவலைகளை ஏற்படுத்தியுள்ளது. கிரமமானதும், முன்னறிவிக்கப்படாததுமான பயணக் கட்டுப்பாடுகளால் பொதுமக்கள் பலர் மிகவும் விசனம் அடைந்திருப் தாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது மருத்துவ சிகிச்சைகளை எதிர்நோக்கியுள்ள நோயாளிகள், வேலை தேடுவோர்கள் மற்றும் வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொள்வோர் போன்ற அனைவரையும் பாதிக்கிறது, இவையனைத்துக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குப் பிரயாணிப்பது அவசியமானதாகிறது.

முகாம்களில் குடும்ப உறுப்பினரொருவர் தங்கியிருக்குமிடத்து இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களை விட்டு வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன் கள்ளிமோட்டை மற்றும் சிறுக்கண்டல் இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களின் பயணக் கட்டுப்பாடுகள் சிறிது தளர்த்தப்பட்டுள்ளன. இது இடம்பெயர்ந்த மக்களின் வெளித் தோற்றப்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த முறை ஏனைய இடம் பெயர்ந்த மக்கள் முகாம்களிலும் பின்பற்றக்கூடியதாகும்.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**
மாவட்டத்தில் வருமானம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் இனங் காணுதல் வேண்டுமென்பதுடன்
மாவட்டத்திலுள்ள இளைஞர்கள் ஏமாற்றம் மற்றும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வழிகள் இல்லாமையால் துணை இராணுவக் குழுக்களோடு சேருவதிலிருந்து தடுக்கும் முகமாக இனங்காணப்பட்ட வருமானம் ஈட்டும் முயற்சிகளில் மாவட்டத்தில் வசிப்பவர்கள் ஈடுபடுவதை ஊக்குவித்தல் வேண்டும். நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதில் ஓர் தெளிவான திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்பதுடன் இச்செயன்முறையைத் துரிதமாக்குவதற்கு மனிதநேய மற்றும் நிவாரண அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுதல் வேண்டும். இதன் மூலம் கூடிய விரைவில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நடைபெறும்.

## திருகோணமலை

**களநிலைமைகள்**
கிரமமான சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளோடு திருகோண மலையில் பாதுகாப்பு நிலைமை தொடர்ந்தும் இறுக்கமாகக் காணப்படுவதுடன் இம்மாதத்தில் பல கைதுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சிறுவர்கள் உட்பட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் புதுக்குடியிருப்பு மற்றும் வன்னிப் பகுதியிலிருந்து திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டனர். அதிகரித்த எண்ணிக்கையிலான நோயாளிகளின் வருகையைச் சமாளிப்பதற்கான மருந்து மற்றும் மருத்துவ உதவிகளுக்கான அவசர தேவைகளை பொது வைத்தியசாலை மற்றும் மாவட்டத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளும் கொண்டுள்ளன.

திருகோணமலை, அலஸ் தோட்டத்தில் 1990 களில் ஏற்படுத்தப்பட்ட நலன்புரி முகாம்களில் வாழுகின்ற இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். சுமார் இரு தசாப்த காலமாக இப்பிரதேசத்திலேயே தொழில்கள் மற்றும் வருமானம் ஈட்டும் முயற்சிகளை ஸ்தாபித்துக் கொண்டதினால் மீள் குடியேற்றம் அவர்களது ஜீவனோபாயங்களைப் பாதிக்குமென அவர்கள் வாதிடுகின்றனர்.

உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளை எதிர்கொள்வதற்கான புதிய நடைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி, அவர்களது தேவைகளுக்கு பல்வேறு அதிகாரிகள் மற்றும் மனிதநேய ஸ்தாபனங்கள் என்பன சேவையளிப்பதற்குப் பதிலாக, அனைத்து உதவிகளும் இனிமேல் டி.பி.டி.எச்.எஸ் அலுவலகத்திற்கு கையளிக்கப்படுவதுடன் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகளின் விநியோகத்தை ஒருங்கிணைப்பர்.

செற்பாட்டாளர்கள்
அரச பாதுகாப்பு படை, தமிழீழ விடுதலைப் புலிகள், மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் ஆகியோர் பிரதான செயற்பாட்டாளர்களாகக் கருதப்படலாம்.

**மாற்றங்கள்**
மாவட்டத்தினுள் அதிகரித்தளவில் வரும் நோயாளிகளைத் தங்க வைப்பதற்கு சுகாதார அதிகாரிகள் சிரமத்தை எதிர்நோக்குவதுடன் மருந்துகள் மற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் மற்றும் மனிதநேய முகவரமைப்புகள் என்பன வன்னியிலிருந்து அதிகளவில் வரும் இடம்பெயர்ந்த மக்களினால் ஏற்பட்டுள்ள நிவாரண உதவிகளுக்கான அவசர தேவைகளை எதிர்கொள்வதற்கான தயாரிப்புகளை மேற்கொள்வதினால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் அதிகரித்த உள்வருகையின் பின்னணியில், இடம் பெயர்ந்த மக்களாகத் தம்மை இனங்காட்டிக் கொண்டு மாவட்டத்தினுள் ஊடுருவதற்கு முயற்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எவரையும் படையினர் இனங் காண்பதற்காக பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புகளின் அதிகரிப்பு, பெரும்பாலான மக்களின் பிரயாண நடவடிக்கைகளில் கட்டுப்படுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**
அதிகரிக்கும் எண்ணிக்கையிலான பொதுமக்களின் பாதிப்பைச் சமாளிக்கும் வகையில் மருத்துவப் பொருட்களின் மேலதிக வழங்கல்கள் அதேபோன்று மாவட்டத்தில் அவசர மருத்துவ உத்தியோகத்தர் அணிகளை பணிக்கமர்த்தப் படுவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதி செய்தல் வேண்டும்.

உள்ளக இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவி வழங்குதல்களை அரசாங்கம் பொறுப்பேற்று ஒருங்கிணைக்கும் புதிய நடைமுறை ஏற்பாடு குறித்து பல மனிதநேய ஸ்தாபனங்கள் கடும் அதிருப்தியுற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விதமான ஏதேனுமொரு முறை ஒளிவு மறைவற்ற தன்மை மற்றும் வகைப் பொறுப்புக் கூறல் என்பவற்றை உறுதி செய்வதற்கு அவசியமான சீர்செய்யும் தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## வவுனியா

களநிலைமைகள்
முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு நோக்கிய யுத்தம் தீவிரமடைவதினால் நாள்தோறும் மாவட்டத்தினுள் பெரும் எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த மக்கள் வருகின்றனர். இவ்வறிக்கையை எழுதும் வேளையில் 30,517 பேர்களைக் கொண்ட சுமார் 7332 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இடம்பெயர்ந்த மக்களைத் தங்க வைப்பதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்ற ஒரு டசினுக்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களின் கட்டிடங்கள் பொறுப்பெடுக்கப்பட்டதுடன், எதிர்பார்க்கப்படும் அதிகரித்தளவிலான இடம்பெயர்ந்த மக்களைத் தங்க வைப்பதற்கு மேலும் கட்டிடங்கள் பொறுப்பேற்கப்பட்டு வருகின்றன. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை அடைவதற்கு பெரும்பாலான இடம்பெயர்ந்த மக்கள் 10 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தை மூன்று நாட்களாக காடுகளினூடாக நடந்து கடந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களுள் அநேகமானவர்கள் நீர் மற்றும் போசாக் கின்மையால் பலவீனமுற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது மாதத்தின் தொடக்கத்திலிருந்து எந்த உணவு வாகனத் தொடரணிகளும் முல்லைத்தீவுக்குச் செல்லவில்லையென்ற காரணத்தினால் ஏற்பட்டதெனத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு கப்பல் மட்டும் சில தொன் உணவுப் பொருட்களை திருகோணமலையிலிருந்து வவுனியாவிற்குக் கொண்டு சென்றது.

ஐ.சி.ஆர்.சி, துப்பாக்கிச் சூடுகள், ஆட்டிலறிக் குண்டுவீச்சு, ஷெல்வீச்சு மற்றும் ஏனைய போர் நடவடிக்கைகளினால் கடுமையாகக் காயமுற்ற 600 க்கும் அதிகமான நோயாளிகளை

அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் உலக உணவுத் திட்டத்தின் உணவு வாகனத் தொடரணிகள் மூலம் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தது. வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் அதிகளவான நோயாளிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களிலுள்ள சுகவீனமுற்றவர்கள் போன்றவர்களைக் கையாள்வதற்கு அவசர மருத்துவ ஊழியர்களைக் கொண்ட விசேட அணியொன்று வவுனியாவிற்கு வந்துள்ளது.

கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தடைந்ததும், பாதுகாப்பு நடைமுறைக் காரணங் களுக்காக அநேகமான குடும்பங்களின் குடும்ப உறுப்பினர்கள் வேறாக்கப்பட்டு பல்வேறு முகாம்களுக்கு அனுப்பப்படுவது இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு மேலும் மனவுளைச்சலுக்குப் பங்களிப்பதாக அமைகிறது.

முகாம்களுக்குள் சில கடைகள், வங்கிகள் மற்றும் கூட்டுறவுக் கடைகளை அரசாங்கம் ஸ்தாபித்திருந்தாலும், கையில் பணமெதுவுமின்றி சிறிதளவான தனிப்பட்ட பொருட்களுடன் யுத்தத்திலிருந்து தப்பியோடி இடம்பெயர்ந்த மக்கள் இந்த வசதிகளால் பயன் எதனையும் பெறமுடியாதுள்ளதுடன் தங்களது மிக அவசியமான தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாதுள்ளனர். இத்தகைய நிலை அவர்கள் மத்தியில் ஏமாற்றம் மற்றும் நம்பிக்கையீனம் என்பவற்றுக்கு வழி வகுத்துள்ளது.

இதேவேளை ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை வவுனியா வாசிகளுக்கு சற்று ஆறுதலைக் கொடுத்துள்ளது.

கொலை, ஆட்கடத்தல்கள் மற்றும் கப்பம் கோருதல் போன்றவை பற்றிய அறிக்கைகளோடு குற்றவிலக்களிப்புக்கானதோர் கலாச்சாரம் வவுனியாவில் வழமையானதொன்று போலக் காணப்படுகிறது. மாவட்டத்தில் இராணுவத்தோடு சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களின் நடமாட்டம் மற்றும் அதிக எண்ணிக்கையிலான பாதுகாப்பு படையினரின் பிரசன்னம் என்பவற்றால் வவுனியாவில் வசிப்பவர்கள் ஒரு அச்சமான சூழ்நிலையிலேயே வசிக்கின்றனர்.

**செயற்பாட்டாளர்கள்**

வவுனியா மாவட்டத்தில் உள்ளக இடம்பெயர்ந்த மக்கள், மனிதநேய மற்றும் நிவாரண முகவரமைப்புகள், அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்பு படைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோர் பிரதான செயற்பாட்டாளர்களாவர்.

**மாற்றங்கள்**

மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை விளைவிக்கும் கல்வியிலான குறுக்கீடு குறித்து அநேகமான பெற்றோர்கள் கவலையடைந்துள்ளனர். யுத்தத்தினால் நிரந்தரமாக ஊனமாக்கப்பட்ட பெருந்தொகையானவர்கள் அதே போன்று குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவரை இழந்துள்ள குடும்பங்கள் ஆகியோர் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அரசை நம்பியிருப்பதால், அவர்கள் அரசின் மீது என்றுமே ஓர் அதிகரிக்கின்ற சுமையை ஏற்படுத்துகிறார்கள். நிவாரணம் மற்றும் உதவிகள் என்பன அதிகரித்த இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களினூடாக பரவிச் செறிவடைவதால், இந்த அதிகரித்த சுமையை அரச அதிகார அமைப்புகள் மற்றும் மனிதநேய முகவரமைப்புகள் ஆகிய இரண்டினாலும் தாங்கிக் கொள்வது கடினமானதாகின்றது.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நலன்புரி முகாம்கள் வசிக்கக் கூடிய நிலையில் தற்பொழுது இல்லாததினால் அரசாங்கம் இவற்றுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். இந்தக் கொட்டகைகள் நெருக்கமானவையாக, சுகாதாரமற்ற மற்றும் போதுமான இடவசதிகளின்றியும் இருப்பதால் அவை தொற்றுநோய் பரவுதலுக்கும் இடமளிப்பவையாக உள்ளன.

மீள்குடியேற்றத்திற்காக இனங்காணப்பட்ட சில காணிகளில் கண்ணிவெடிகள் இன்னமும் அகற்றப்பட வேண்டியுள்ளதால், மீள்குடியேற்ற செயன்முறைகளும் மந்த கதியிலேயே முன்னேற்றம் காண்கிறது. முகாம்களிற்கு கூடுதல் மருத்துவ உதவிகள் தேவையாக இருக்கையில், பெரும் மனவுளைச்சல் மற்றும் உடற்துன்பங்களுக்கு உட்பட்டுள்ள மக்களின் உளவியல் ரீதியான நலன்களும் கவனிக்கப்படுதல் வேண்டும்.

துணை இராணுவக் குழுக்களின் அடாவடித்தன நடவடிக்கைகள் கட்டுப்பாடின்றிப் பரவியிருக்கும் நிலையில் அதனை அடக்குவதற்கு அரசாங்கம் மற்றொரு போரை நடாத்த வேண்டி ஏற்படுவதற்கு முன்னர் அவை நிறுத்தப்படல் வேண்டும். துணை இராணுவக் குழுக்களின் உறுப்பினர்களில் அநேகமானவர்கள், வேலை பெற்றுக் கொள்ள முடியாததினால் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக இணைந்து கொண்ட இளைஞர்களாகக் காணப்படுவதினால் வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் இதற்கானதொரு தீர்வாக அமையலாம்.

எங்களது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்

http://www.humanitarian-srilanka.org/Knowledge_Centre/Publications.php

சூழ்நிலையின் துரித மதிப்பிடல் (RCA) உள்ளூர் சூழ்நிலைகளின் மாற்றங்களை நன்கு புரிந்து கொள்வதன் அடிப்படையில் பல்வேறுபட்ட மனிதநேய மற்றும் அபிவிருத்தித் தேவைகள் குறித்து கவனம் செலுத்தும் அதிக பயனுறுதி கொண்ட இடையீடுகளைத் திட்டமிட்டு, அமுல்படுத்துவதற்கான பயனுள்ள தகவல்களை மனிதநேய மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனங்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதே வேளை, சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் இடையீடுகள் மாவட்டங்களின் சமாதானம் மற்றும் மோதல்நிலை மாற்றங்களுக்கு கூருணர்வுத்தன்மை கொண்டவை என்பதையும் முகவர்கள் மோதல்களை சிறிதளவேனும் உருவாக்கவோ அல்லது மோசமாக்குவதையோ தவிர்த்து மோதல் தணிப்பு/மோதல் உருமாற்றம் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் கூடுதல் ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

சூழ்நிலைகளின் அபாயவாய்ப்புக்களை மதிப்பிடல் முகவர்களின் செயற்பாடுகளை சற்று இடைநிறுத்தி

ஊழியர்கள் மற்றும் திட்டம் அமுல்படுத்தும் இடங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

வெளியேயுள்ள மட்டத்தில் (பொது மக்கள், சர்வதேச சமுகம்) ஆலோசனைத் தேவைகளுக்காக இலங்கையின் மாவட்டங்களின் நிலைமைகள் பற்றிய விரிவானதும், நடுநிலையானதுமான தகவல்களை சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் வழங்கும்.

இந்த அறிக்கை மீதான உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வரவேற்கிறோம், அவற்றை பின்வரும் மின்னஞ்சல்/தபால் முகவரிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும்: feedback@cha.lk

மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு

30/81, லோங்டன் பிளேஸ்,

கொழும்பு 7, இலங்கை.

தொலைபேசி/தொலைநகல் : 94-112506855/2598413